A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
– Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building, Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in

**முன்னிலை: திரு. செ.தேவராஜன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 11 / 2022</u>**

திரு. S. சுரேஸ்குமார் நிர்மலா மூர்த்தி,
பிளாட் எண். 28, சூர்யா தெரு,
பரணி காலணி, சாலிகிராமம்,
விருகம்பாக்கம்,
சென்னை – 93.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு K. சீனிவாசன்)

எதிர்

செயற்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு-1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

...... எதிர்மனுதாரர்
(திரு. T. வேல்முருகன், செயற்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 12-01-2022</u>**

**<u>கேட்புரை நாள்: 24-03-2022</u>**

**<u>ஆணை நாள்: 21-05-2022</u>**

12.01.2022 அன்று பெறப்பட்ட திரு. S. சுரேஸ்குமார் நிர்மலா மூர்த்தி, பிளாட் எண். 28, சூர்யா தெரு, பரணி காலணி, சாலிகிராமம், விருகம்பாக்கம், சென்னை – 93 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 11/2022 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீப்பாளரின் கேட்புரை 24.03.2022 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில்

எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்க்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

**ஆணை**

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

பிளாட் எண்.28, சூர்யா தெரு, பரணி காலணி, சாலிகிராமம், விருகம்பாக்கம், சென்னை என்ற முகவரியில் அமைந்துள்ள தனது கட்டிடத்திற்கு 7 மும்முனை மின் இணைப்புகள் வேண்டி மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 சாலிகிராமம், விருகம்பாக்கம் முகவரியில் அமைந்துள்ள தனது கட்டிடத்திற்கு 7 மும்முனை மின் இணைப்புகள் வேண்டி இணையதளம் மூலம் விண்ணப்பித்ததாக மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய விண்ணப்பத்தை பெற்ற எதிர்மனுதாரர் அவ்விடத்தை கள ஆய்வு செய்ததில் மின் இணைப்பு கோரும் கட்டிடமானது மூன்று தளங்களுக்கு மேல் உள்ளதால் அவ்விடத்திற்கு மின் இணைப்பு வழங்க completion certifice சமர்ப்பிக்குமாறு எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரிடம் தெரிவித்துள்ளார்.

2.3 உரிய காலத்தில் completion certifice சமர்ப்பிக்காத காரணத்தால் மின் இணைப்பு கோரும் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.4 மின் இணைப்பு வேண்டி மேல்முறையீட்டாளர் சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I, மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தை 28.10.2021 அன்று அணுகியுள்ளார்.

2.5 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I 17.12.2021 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 **மன்றத்தின் தீர்வு:**

சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 08.12.2021 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**மன்றத்தின் தீர்வு**:*

*The petitioner's building falls under the above category and hence completion certificate is mandatory for effecting service connections.*

*Hence the petitioner is directed to obtain completion certificate from the competent authority and produce to TANGEDCO for effecting service connections.*

*The EE/O&M/KK Nagar is directed to enquiry whether s/c.230018519 has been effected without completion certificate as represented by the petitioner in the forum and to submit a detailed report in this regard.*

*With these directions, the petition is treated as closed."*

4.0 **மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை நேரில் எடுத்துரைப்பதற்கு வசதியாக 24.03.2022 அன்று கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு K. சீனிவாசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர் திரு. T. வேல்முருகன், செயற்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர், சென்னை மின்பகிர்மான வட்டம்/தெற்கு–I அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்மந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்மந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான

ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **<u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:**

5.1 திரு. S. சுரேஸ்குமார் நிர்மலா மூர்த்தி, பிளாட் எண். 28, சூர்யா தெரு, பரணி காலணி, சாலிகிராமம், விருகம்பாக்கம், சென்னை – 93 என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள தனது கட்டிடத்திற்கு மின் இணைப்புகள் வேண்டி சென்ற 02.09.2021 அன்று தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம் இணையதளம் வாயிலாக விண்ணப்பம் (விண்ணப்ப எண். 200092300921876, 200092300921877, 200092300921879, 200092300921880, 200092300921881, 200092300921882 மற்றும் 200092300921883) பதிவு செய்யப்பட்டு மின் இணைப்புகள் வழங்கிடவில்லை என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் இணைப்புக்கான மேற்கூறிய அனைத்து விண்ணப்பத்தின் நிலைப்பட்டியலில் 3-9-2021 site inspection completed. Estimate preparation and sanction uner process என குறிப்பிட்டுள்ளபடி தனது இடத்திற்கு மின் இணைப்பு வழங்கிட மேலும் எவ்வளவு கால அவகாசம் தேவைப்படுகின்றது என்பதை எழுத்து மூலமாக குறிப்பிட்டு அளிக்க வேண்டியும், விண்ணப்பித்து நிர்வாகத்தின் உத்தரவுப்படியான காலத்திற்கும், விதிமுறையில் குறிப்பிட்டுள்ள காலத்திற்கும் காலம் அதிகமாக உள்ளதால் பல லட்சங்கள் செலவு செய்து கட்டிய வீட்டுக்கு காலத்தில் குடிபுகாமல் வீணாகின்றதாகவும் மற்றும் உரியவர்க்கு ஒப்படைக்க முடியாமல் வழங்க வேண்டிய மின் இணைப்பால் பாதிப்பு ஏற்படுகின்றதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 ஆகையால் காலத்திற்குள் வழங்கிடாத மின் இணைப்புக்கு காரணம் குறிப்பிடாமலும், நிர்வாகத்தின் உத்தரவுப்படியும் அடிப்படை விதிகளின்படியும் மீறல்கள் உள்ளதால் இதனால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு மாத வாடகை என கணக்கிட்டால் என்ன தொகை வருமோ அத்தொகையினை பின்னர் குறிப்பிடும் மின் உபயோக மின்இணைப்பு எண்ணில் கழித்து தரவேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கிடாததற்கு உரிய நடவடிக்கையும், மேலும் காலம் கடக்கும் என்றால் தீர்வு வேண்டி முறையிடுவதற்கு உரிய நீதிமன்றத்திற்கு பரிந்துரைத்து கடிதம் வழங்கிட வேண்டும் எனவும், அல்லது உரிய காரணம் குறிப்பிட்டு தெரிவிக்காமல் கிடப்பிலுள்ள தனது விண்ணப்பத்திற்கு மின் இணைப்புகள் வழங்கி தீர்வு வழங்கவேண்டும் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மின் இணைப்பு கோரி 2/9/2021 இல் விண்ணப்பித்திட்ட தனது மனுக்களுக்கு காலத்திற்குள் மின் இணைப்பு வழங்கிடவில்லை எனவும், இதனால் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அதுகுறித்து மின்நுகர்வோர் குறைதீர்மன்றத்தில் மனு அளித்து அதற்கான விசாரணையும் நடந்திட்டு அவ்விசாரணைக்கு தனது அங்கீகாரம் பெற்ற நபரான திரு.K. சீனிவாசன் என்பவரை நியமித்து தனக்கு பதிலாக விசாரணையில் கலந்து கொள்வதற்கு அனுமதியும் அளித்து அவரும் கலந்து கொண்டு உரிய பதில் அளித்து 6/1/2022 நாளிட்ட உத்தரவு கடிதம் இணையதளத்தின் வாயிலாக 6/1/2022 பெறப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 மனுதாரர் திரு. S. சுரேஷ் & நிர்மலா மூர்த்தி பிளாட் எண் 28, சூரியா தெரு, பரணி காலனி, சாலிகிராமம், விருகம்பாக்கம் என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள அவருடைய கட்டிடத்திற்கு 7 மும்முனை மின் இணைப்புகள் வேண்டி சென்ற 02.09.2021 மற்றும் 03.09.2021 அன்று தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகம் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்திருந்ததாகவும், விண்ணப்ப பதிவு எண்கள் 200092300921876, 200092300921877, 200092300921879, 200092300921880, 200092300921881, 200092300921882 மற்றும் 200092300921883 என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 மனுதாரரின் விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்கும் பொருட்டு உதவி பொறியாளர்/இ.ப./கக/ நகர் மேற்கு அவர்களின் மூலம் அவ்விடத்தை கள ஆய்வு செய்ததில் மனுதாரரது மின் இணைப்பு கோரும் கட்டிடமானது மூன்று தளங்களுக்கு மேல் உள்ளது தெரியவந்தது. (stilt+3 floor) 1) Memo.No. CE/Comml/ SE/ Comml/ EE3/

AEE2/F.Plg.Per/D-139/2020 dated 4-7-2020 2) Memo.No. CE/Comml/ SE/ Comml/ EE3/ AEE2/F.Flm.CM/593/2021 dated 1-9-2021 அறிவுறுத்தலின் படி அவ்விடத்திற்கு மின் இணைப்பு வழங்க completion certificate இன்றியமையாதது. மற்றும் அது தொடர்பான அறிவுறுத்தல் மனுதாரருக்கு உதவி பொறியாளர்/இ.ப./கக நகர் மேற்கு அவர்களின் மூலம் தெரிவிக்கப்பட்டது. இருப்பினும் மனுதாரர் அவ்விடத்திற்கான completion certificate உரிய காலத்தில் சமர்பிக்காத காரணத்தால் மனுதாரர் விண்ணப்பித்திருந்த மின் இணைப்புகள் அனைத்தும் இணையதளம் வாயிலாக நிராகரிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேலும் இது தொடர்பாக மனுதாரர் திரு.S. சுரேஷ் குமார் மற்றும் நிர்மலா மூர்த்தி அவர்கள் மின்நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தில் கடந்த 28.10.2021 அன்று மனு அளித்திருந்தார். அதன்படி அம்மனு கடந்த 08.12.2021 மின்நுகர்வோர் குறைதீர்வு மன்ற தலைவர் அவர்கள் முன்னிலையில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. அவ்விசாரணையில் மனுதாரரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதியாக திரு.கே.சீனிவாசன் அவர்கள் கலந்துக்கொண்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 புதிய மின் இணைப்புகள் வேண்டி 02.09.2021 மற்றும் 03.09.2021 அன்று விண்ணப்பிக்கப்பட்டிருந்த விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டது தொடர்பாகவும் completion certificate சம்பந்தமான அறிவுறுத்தல் ஏதும் உதவி பொறியாளர்/இ&ப/கக நகர் மேற்கு அவர்களின் மூலம் தரபடவில்லை என்று மனுதாரர் மன்றத்தில் முறையிட்டிருந்ததாகவும், அதற்கு உதவி செயற்பொறியாளர்/இ&ப/கக நகர் மேற்கு அவர்கள் மின் இணைப்பு விண்ணப்பம் completion certificate-க்காக hold-இல் வைக்கும்போது உடனடியாக விண்ணப்பதாரருக்கு மின் அஞ்சல் வழியாக தகவல் சென்று அடைந்துவிடும் என்றும் completion Certificate தொடர்பான அறிவுறுத்தல் மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மேலும் இருதரப்பு வாதங்களின் முடிவில் மின் நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தின் இறுதி அறிக்கை பெறப்பட்டு அதன்படி மனுதாரரது மின் இணைப்பு கோரும் கட்டிடம் (stilt+3 floof) மேற்குறிப்பிட்ட வகையில் வருவதால் அக்கட்டிடத்திற்கு மின் இணைப்பு வழங்க completion certificate அவசியமாகிறது எனவும், அதனால் மனுதாரர் உரிய துறையில் இருந்து completion certificate பெற்று தமிழ்நாடு மின் உற்பத்தி

மற்றும் மின் பகிர்மான கழக பிரிவு அலுவலகத்தில் சமர்ப்பித்து மின் இணைப்பு பெற்றுக் கொள்ளுமாறு மனுதாரருக்கு உத்தரவிட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் மின் இணைப்பு எண் 230018519 completion certificate பெறப்படாமல் மின் இணைப்பு வழங்கியதாக மனுதாரர் மின் நுகர்வோர் குறைதீர்வு மன்றத்தில் குறிப்பிட்டது குறித்து விசாரணை செய்து விரிவான அறிக்கை சமர்ப்பிக்குமாறு செயற்பொறியாளர்/இ(ம)ப/கக நகர் அவர்களுக்கு அறிவுறுத்தியிருந்ததாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 அவ்வுத்தரவுபடி மனுதாரர் கூறியிருந்த மின் இணைப்பு எண் 230018519 விசாரணை மேற்கொண்டதில் மின் இணைப்பு எண் ஆனது எண் 24 முனுசாமி சாலை K.K நகர் மேற்கு, K.K நகர் என்ற முகவரியில் ஷெரிஸ் சக்ரா வென்ச்சர்ஸ் பிரைவேட் லிமிட்டடு என்ற பெயரில் கடந்த 16.09.2021 அன்று இணையதளம் வாயிலாக விண்ணப்பபிக்கப்பட்டது. (App.No.2300921919 dt. 16-9-2021). அவ்விண்ணப்பத்தை ஆய்வு செய்ததில் விண்ணப்பத்துடன் completion certificate இல்லாமல் இணைக்கப்பட்டது தெரியவந்தது. மேலும் இது தொடர்பாக மனுதாரருக்கு உதவி பொறியாளர்/இ-ப/கக நகர் மேற்கு அவர்களின் மூலம் தெரிவிக்கப்பட்ட உடன் மனுதாரர் உடனடியாக 18.09.2021 அன்று completion certificate இணையதளம் வாயிலாக விண்ணப்பித்திருந்தார். அதன்படி அவருக்கு மின் இணைப்பும் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 மேலும் மனுதாரர் மின் இணைப்பு கோரும் கட்டிடம் completion certificate தேவைப்படும் வகையில் வருவதால் மனுதாரர் completion certificate உடன் இணையதளம் வாயிலாக விண்ணப்பித்தால் மின்இணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தன்னுடைய வாதத்தில் பிளாட் எண் 28, சூரியா தெரு, பரணி காலனி, சாலிகிராமம் என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள தனது கட்டிடத்திற்கு 7 மும்முனை இணைப்புகள் வேண்டி 02.09.2021 அன்று இணையதளம் வாயிலாக விண்ணப்பம் பதிவு செய்யப்பட்டு மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

7.3 எதிர்மனுதாரர் தன்னுடைய வாதத்தில் மேல்முறையீட்டாளரின் விண்ணப்பங்களின் மீத நடவடிக்கை எடுக்கும்பொருட்டு அவ்விடத்தை கள ஆய்வு செய்ததில் மனுதாரரின் மின்னிணைப்பு கோரும் கட்டிடமானது மூன்று தளங்களுக்கு (stilt + 3 floor) மேல் உள்ளதாகவும், தலைமை பொறியாளர்/வணிகம் அவர்களின் 4.7.2020 மற்றும் 1.9.2021 நாளிட்ட கடிதங்களில் அறிவுறுத்தப்பட்டவாறு மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு மின்னிணைப்புகள் வழங்ககுவதற்கு கட்டுமான பணி நிறைவடைந்தற்கான completion certificate பெற்று உரிய காலத்தில் சமர்ப்பிக்காததால் மேல்முறையீட்டாளரின் மின்னிணைப்பு கோரும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாக தெரிவித்துள்ளார். மேலும் உரிய துறையில் இருந்து கட்டுமான பணி நிறைவு சான்றிதழ் பெற்று சமர்ப்பித்தால் மின்னிணைப்பு வழங்க உரிய நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்துள்ளார்.

7.4 இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட மேல்முறையீட்டாளரின் கட்டிடம் (stilt + 3 floor) மேல் உள்ளதாகவும், அந்தக் கட்டிடத்திற்கு 7 மின்னிணைப்புகள் கோரியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார். மேலும் தலைமைப் பொறியாளர் அவர்களின் 4.7.2020 நாளிட்ட கடிதத்தின்படி மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு மின்னிணைப்பு வழங்குவதற்கு completion certificate பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மின்னிணைப்பு வழங்க இயலும் என வாதிடுவதால் நான் அந்த கடிதத்தை பார்வையிட விரும்புகிறேன். அக்கடித்தின் சம்பந்தப்பட்ட பத்திகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

> *"6. In this connection, the instructions were issued vide reference (5) cited based on the Tamil Nadu Combined Development and Building Rules, 2019. As there was a deviation from the said Rules, 2019, in the above instructions, the same is now withdrawn. In the light of the position stated in paragraphs 2 to 5 above, the following revised instructions are issued for strict adherence throughout the State, which will supersede all earlier instructions including based on the orders of the Hon'ble High Court, Madras:*

(a) *Except residential building upto 12m in height not exceeding 3 dwelling units or 750 sq.m and all type of Industrial buildings, all other buildings requires completion certificate before effecting electricity service connection(s). For the exempted buildings, the intending consumer shall not be insisted to produce Planning Permit and Completion Certificate for effecting electricity service connections.*

(b) *While registration of application for permanent electricity supply, except as far as the exempted buildings stated above, the application shall be accompanied with planning permit.*

(C) *In view of the provisions contained in section 175 of the Electricity Act, 2003, (Provisions of this Act to be in addition to and not in derogation of other laws), as far as the buildings coming under non-exempted category are concerned, on completion of the construction of the building, the temporary electricity service connection provided for construction purpose has to be disconnected and the permanent electricity service connection(s) shall be provided on receipt of the completion certificate as stated above. However, this will not apply to the exempted buildings and as such, for exempted buildings alone, the provisions contained in Regulation 39 of the Tamil Nadu Electricity Distribution Code, 2004 shall be followed.*

(d) *Production of Completion Certificate shall not apply to constructions in progress as per the valid approved plans accorded on or before 04.02.2019 including subsequent renewal period and also for buildings constructed already as per the approved plan and completion certificate is awaited from the competent authority.*

(e) *In case of construction of building already in progress or construction completed, prior to 04.02.2019, in respect of Multistoried buildings (Stilt + 4 or Ground + 3 floors and above) alone in the CMDA area, the earlier instruction issued in Memo No. CE/Comml/SE/Comml/ EE3/AEE2/F. Plg. Per/D. 175/2017, dt 04-05-2017, requiring to comply with planning permission and Completion Certificate for effecting electricity service connections, shall be continued to be followed.*

(f) *On other aspects, the provisions contained in the Tamil Nadu Electricity Supply Code, 2004 and/or the Tamil Nadu Electricity Distribution Code, 2004 shall be followed scrupulously."*

7.5 மேற்கண்ட பத்திகளின்படி உரிமம்தாரரின் 4.7.2020 நாளிட்ட கடிதமானது சென்னை உயர்நீதிமன்றம் W.P.No. 14520 of 2017–இல் 9.1.2018 அன்று வழங்கிய ஆணை மற்றும் அதன் தொடர்ச்சியாக 4.2.2019 அன்று வெளிடப்பட்ட தமிழ்நாடு அரசு ஆணை எண் 18 (Tamil Nadu Combined Development and Building Rules, 2019)–இல் அறிவுறுத்தப்பட்டவாறே வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 3 குடியிருப்புகள் அல்லது 750 sq.m மிகாத 12 மீட்டர் உயரம்வரை உள்ள குடியிருப்பு கட்டிடம் மற்றும் அனைத்து வகையான தொழிற்சாலை கட்டிடங்களை தவிர்த்து உள்ள அனைத்து

கட்டிடங்களுக்கும் மின்னிணைப்பு வழங்குவதற்கு கட்டுமான நிறைவு (completion certificate) சான்றிதழ் அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது. மற்றும் விலக்களிக்கப்பட்ட கட்டிடங்களை தவிர உள்ள அனைத்து வகையான கட்டிடங்களுக்கு மின்னிணைப்பு பெறும்பொழுது திட்ட அனுமதி (planning permission) தேவையென்றும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

7.6 இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட (மேல்முறையீட்டாளரின் கட்டிடத்திற்கு பெருநகர சென்னை மாநகராட்சி (மண்டலம் 10, நகரமைப்பு பிரிவு) ஆணையாளரால் 10.3.2020 அன்று திட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. திட்ட அனுமதியில் உள்ள வரைபடத்தின்படி ஆறு குடியிருப்புகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் திட்ட அனுமதி வழங்கும்போது "completion certificate is mandatory for availing service connections from TNEB and CMWSSB" என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட பத்திகளின் தீர்வுகளின்படி மேல்முறையீட்டாளர் மின்னிணைப்புகள் கோரி விண்ணப்பித்துள்ள கட்டிடம் விலக்களிக்கப்பட்ட கட்டிடம் (exempted buildings) என்ற வரையறைக்குள் வராததால் உரிய அதிகார அமைப்பிடம் இருந்து பணி நிறைவு சான்றிதழ் (completion certificate) பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மேல்முறையிட்டாளருக்கு மின்னிணைப்பு வழங்க இயலும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை</u>:**

8.1 பத்தி 7.0–இல் உள்ள தீர்வுன்படி மேல்முறையீட்டாளர் மின் இணைப்புகள் கோரி விண்ணப்பித்துள்ள கட்டிடம் விலக்களிக்கப்பட்ட கட்டிடம் (exempted bui;dings) என்ற வரையறைக்குள் வராததால் உரிய அதிகார அமைப்பிடம் இருந்து பணிநிறைவு சான்றிதழ் (completion certificate) பெற்று சமர்ப்பித்தால் மட்டுமே மேல்முறையீட்டாளருக்கு மின்னிணைப்பு வழங்க இயலும் என்று தீர்வு செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட முடிவுடன் மேல்முறையீட்டு மனு எண் 11/2022 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

**(செ. தேவராஜன்)**
மின்குறைதீர்ப்பாளர்

பெறுநர்:

1. திரு. S. சுரேஸ்குமார் நிர்மலா மூர்த்தி,
பிளாட் எண். 28, சூர்யா தெரு,
பரணி காலனி, சாலிகிராமம்,
விருகம்பாக்கம்,
சென்னை – 93.

2. செயற்பொறியாளர் /இ&ப/கே.கே.நகர்,
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

3. மேற்பார்வை பொறியாளர், –By email
சென்னை மின் பகிர்மான வட்டம்/தெற்கு–1,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
110KV துணை மின்நிலைய வளாகம்,
கே.கே. நகர், சென்னை – 78.

4. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

5. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.

6. உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.